## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.538/2024
Sessions)

( Prosecution P.W.1
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | மணிராஜா | -- | |
| Father's Name | பெருமாள் | Calling | சர்வீஸ் அட்வைசர் |
| Village | வன்னியம்பட்டி | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of November 2025.

**Accused absent. Petition filed.**

**முதல் விசாரணை**

நான் திருவில்லிபுத்தூர் தாலுகா, வைத்தியலிங்காபுரம் தேவர் தெருவில் குடியிருந்து வருகிறேன். படிக்காசுவைத்தான்பட்டி, வன்னியம்பட்டி விலக்கு அருகில் உள்ள ABT மாருதி கார் கம்பெனியில் சர்வீஸ் அட்வைசராக வேலை பார்த்து வருகிறேன். என்னுடன், சண்முகசிகாமணி என்பவர் சர்வீஸ் அட்வைசராகவும், தங்கப்பாண்டி, மணிகண்டன் ஆகியோர் மெக்கானிக்காகவும் உள்ளனர். மேலும் குருமூர்த்தி மற்றும் முத்துமணி ஆகியோரும் மெக்கானிக்காக வேலை பார்த்து வருகின்றனர். நான் வழக்கமாக காலை 08.30 மணிக்கு என்னுடைய பைக்கில் வேலைக்குச் செல்வேன், அப்போது சிகாமணியும் வருவார். 30.08.2023ம் தேதி TN84A1738 என்ற பதிவெண் உள்ள பேசன் புளோர் வாகனத்தை நான் ஓட்டிக்கொண்டும், எனக்கு பின்னால் சிகாமணி உட்கார்ந்து கொண்டும், சுமார் 50 மீ தூரத்தில் எங்களுக்கு முன்னால் குருமூர்த்தி TN79A4488 என்ற பதிவெண் உள்ள ராயல் என்பீல்டு வண்டியை ஓட்டிக்கொண்டும் அவருக்குப் பின்னால் முத்துமணி அமர்ந்திருந்தும், திருவில்லிபுத்தூர் – இராஜபாளையம் ரோட்டில் குண்டுசி மில் அருகில் ரோட்டில் இடது ஓரமாக நாங்கள் சென்று கொண்டிருந்தோம். நாங்கள் சென்று கொண்டிருந்தபோது அருகில் உள்ள வளைவு பகுதியில் இருந்து மிக வேகமாக KL25L2829 என்ற பதிவெண் உள்ள மாருதி சுசுகி விட்டாரா பிரிசா என்ற கார் குருமூர்த்தி மீது மோதி விட்டது. அதனால் குருமூர்த்தி காரில் பேனட்டில் விழுந்து பின்னர் ரோட்டில் ஓரத்தில் இருந்த இரும்பு தடுப்புச் சுவரை தாண்டி தூக்கி வீசப்பட்டு பள்ளத்தில் விழுந்தார். அவருக்குப் பின்னார் உட்கார்ந்திருந்த முத்துமணி இந்த சம்பவத்தால் இரும்பு கேட்டில்

அடித்து ரோட்டில் விழுந்துவிட்டார். உடனடியாக நாங்கள் எனது வாகனத்தை நிறுத்திவிட்டு குருமூர்த்தியையும், முத்துமணியையும் தூக்கிவிட்டு அவர்களிடம் எந்த அசைவும் இல்லை. குருமூர்த்தியை தூக்கும்போது அவருக்கு இரண்டு கைகளும் உடைந்து அவருக்கு மூக்கிலிருந்து இரத்தம் வந்தது, முத்துமணிக்கு உயிர்த்தளத்தில் அடிபட்டிருந்தது. அந்த காரை ஒரு பெண் ஓட்டி வந்திருந்தார். அவர்களுக்கு லேசான ஊமைக்காயம் ஏற்பட்டிருந்தது. அந்தக் காரில் அந்தப் பெண்ணையும் சேர்த்து மொத்தம் 4 பேர் வந்திருந்தனர். அப்போதே எங்களுடன் வந்திருந்த மற்ற சிலர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்ததன் பேரில் வன்னியம்பட்டி காவல் நிலைய போலிசாரும் அங்கு வந்துவிட்டனர். போலிசாரிடம் விசாரித்த போது அந்த காரை ஓட்டி வந்த பெண்ணின் பெயர் மரிய வினிதா அச்சுமோன் என்றும், அவருடன் வந்த அவர் கணவர் பெயர் ஜெரின் ஜேக்கப் என்றும், மரிய வினிதா அச்சுமோனின் தந்தையின் பெயர் அச்சன்குஞ்சு என்றும், அம்மாவின் பெயர் பீனா அச்சன்குஞ்சு என்றும் தெரிந்து கொண்டேன். அச்சன்குஞ்சுவுக்கு இந்த சம்பவத்தில் கையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டிருந்தது, பீனா அச்சன்குஞ்சுவுக்கு வலது காலில் வீக்கம் ஏற்பட்டது. மேற்படி காரை ஓட்டிவந்த நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். இன்று அவர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அங்கு வந்திருந்த போலிசார் 108 ஆம்புலன்சிற்கு தகவல் தெரிவித்தார்கள். 108 ஆம்புலன்ஸ் வந்தவுடன் அவர்கள் வந்து குருமூர்த்தியும், முத்துமணியும் அசைவற்று இறந்துபோய் இருந்ததால் அவர்களை கொண்டு செல்லாமல் காயம்பட்டிருந்த மற்றவர்களை அதில் ஏற்றிக்கொண்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள். பின்னர், ஒரு தனியார் ஆம்புலன்சில் குருமூர்த்தியையும், முத்துமணியையும் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அதன் பின்னர் நானும், சண்முகசிகாமணியும் வன்னியம்பட்டி விலக்கு காவல் நிலையம் சென்று நான் ஒரு புகார் மனு கொடுத்தேன். அதில் சண்முகசிகாமணியும் சாட்சியாக கையெழுத்து செய்தார். நான் கொடுத்த புகார் மனு **அ.சா.ஆ.1 ஆகும்.** காரில் வந்தவர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்துகொண்டேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் ABT மாருதி சர்வீஸ் நிறுவனத்தில் வேலை பார்த்ததை காட்டக்கூடிய அடையாள அட்டையை போலிசாரிடம் கொடுத்துள்ளேன். நான் ABT மாருதி சர்வீஸ் நிறுவனத்தில் பணியாற்றவில்லை என்றும், எந்த அடையாள அட்டையும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண்ணை என்னுடைய புகாரில் குறிப்பிடவில்லை. நாங்கள் ABT மாருதி சர்வீஸ் நிறுவனத்தில் பணியாற்றுகிறோமா என்று எங்கள் மேலாளரை விசாரித்தால் தெரியும். என் மீது வன்னியம்பட்டி காவல் நிலையத்தில் ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கில் நான் பிணையில் உள்ளேன். இறந்தவர் ஓட்டிச் சென்ற ராயல் என்பீல்டு இருசக்கர வாகனம் சங்கரன்கோவிலைச் சேர்ந்த வெங்கடேசபெருமாள் என்பவருக்குச் சொந்தமானது.

எதிரியின் பெயர் விபரங்கள் மற்றும் அவரோடு வந்தவர்களின் விபரங்கள் ஆகியவை போலிசார் சொல்லித்தான் தெரியும் என்ற விபரத்தை என் புகார் மனுவிலோ, போலீஸ் விசாரணையிலோ குறிப்பிடவில்லை. இறந்த நபருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. சம்பவ இடத்திற்கும், வன்னியம்பட்டி காவல்நிலையத்திற்கும் சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கு ஒரு சார்பு ஆய்வாளர் இரவிச்சந்திரன், இரண்டு காவலர்களும் வந்தார்கள். அவர்கள் சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்தார்களா, காணொளி எடுத்தார்களா என்று எனக்குத் தெரியாது. சம்பவ இடத்தில் பொதுமக்கள் சுமார் 40 பேர் இருந்தார்கள். அதில் எங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் சுமார் 20 பேர் இருந்தார்கள். அவர்களை விசாரித்தால் நான் சொன்னது போல் சம்பவம் நடந்ததா என்று தெரியவரும். இறந்தவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலமாகத்தான் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக போலிஸ் விசாரணையிலும், புகார் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சம்பவம் நடந்து ஒரு மணி நேரத்திற்குள் புகார் கொடுத்துவிட்டேன். அந்த புகாரை எங்கள் மேலாளரோடு கலந்து ஆலோசனை செய்து தான் கொடுத்தேன். புகாரை நான் தான் எழுதினேன். வழக்குச் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் தான் நான் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வன்னியம்பட்டி காவல் துறையினரின் கையிருப்பு சாட்சி என்று சொன்னால் சரியல்ல. புகார் மனு வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இறந்த குருமூர்த்தி வாகனத்தை ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஓட்டி பழகியபோது குருமூர்த்தியின் கவனக்குறைவான செயல்பாட்டால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of November 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**